‘வளர்ச்சியடைந்த பாரதம்’ தகவலை நிறுத்தவும்: மத்திய அரசுக்குத் தேர்தல் ஆணையம் உத்தரவு

புது தில்லி, மார்ச் 21: அரசின் சாதனைகளை ‘வளர்ச்சியடைந்த இந்தியா பிரசாரம்’ மூலம் மக்களுக்கு வாட்ஸ் ஆப் செய்திகளாக அனுப்புவதை உடனடியாக நிறுத்துமாறு மத்திய அரசுக்குத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய அரசின் சாதனைகள் குறித்தும் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான பரிந்துரையை அளிக்குமாறும் மக்களின் வாட்ஸ் ஆப் எண்களுக்குச் செய்திகள் அனுப்பப்பட்டன. அவற்றுடன் பிரதமர் நரேந்திர மோடி எழுதிய கடிதம் இணைக்கப்பட்டிருந்தது.

மக்களவைத் தேர்தல் தேதி கடந்த மார்ச் 16-ஆம் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில், தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்தன.

இந்நிலையில், மத்திய அரசின் வாட்ஸ் ஆப் செய்திகள் அனுப்பப்படுவது குறித்து சி-விஜில் கைப்பேசி செயலி மூலம் தேர்தல் ஆணையத்துக்குப் புகார்கள் வந்தன.

இந்தச் செய்திகள் அனுப்புவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், தேர்தல் நடத்தை விதிகளை மீறியதற்காகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தேர்தல் ஆணையத்துக்குக் கோரிக்கை விடுத்துள்ளன.

வாட்ஸ் ஆப் செய்திகள் அனுப்பப்படுவது குறித்து தெரிவிக்கப்பட்ட புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தேர்தல் ஆணையத்துக்கு சண்டீகர் தலைமை தேர்தல் அதிகாரி செவ்வாய்க்கிழமை பரிந்துரைத்திருந்தார்.

இந்நிலையில், மக்களுக்கு வாட்ஸ் ஆப் மூலம் செய்திகள் அனுப்புவதை உடனடியாக நிறுத்துமாறும் இது தொடர்பாக உடனடியாகப் பதிலளிக்குமாறும் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலருக்குத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.

இதற்கு மத்திய அமைச்சகம் தெரிவித்துள்ள பதிலில், ‘பிரதமர் நரேந்திர மோடியின் கடிதத்துடன் அந்தச் செய்திகள் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வருவதற்கு முன்பாக அனுப்பப்பட்டன. தொழில்நுட்பக் கட்டமைப்பு மற்றும் நெட்வொர்க் குறைபாடுகள் காரணமாக சில கடிதங்கள் காலதாமதமாக சென்றடைந்திருக்கலாம்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் விளம்பரங்களுக்கு எதிராக தேர்தல் ஆணையத்தில் காங்கிரஸ் புகார்

புது தில்லி, மார்ச் 21: பிரதமர் மோடியின் தேர்தல் பிரசாரத்துக்கு அரசுப் பணம் தவறாக பயன்படுத்தப்படுகிறது என்று குற்றம்சாட்டியுள்ள காங்கிரஸ், ‘நான் மோடியின் குடும்பம்’, ‘மோடியின் உத்தரவாதம்’ ஆகிய விளம்பரங்களுக்கு எதிராக தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்துள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர்கள் முகுல் வாஸ்னிக், சல்மான் குர்ஷித், சுப்ரியா ஸ்ரீநாத் ஆகியோர், தேர்தல் ஆணையத்தில் வியாழக்கிழமை புகார் மனுக்கள் அளித்தனர். அவற்றில் கூறப்பட்டுள்ளதாவது:

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரம் தொடர்பாக பாஜக தவறான விளம்பரங்களை வெளியிட்டுள்ளது. நீதிமன்ற நடைமுறையின் மூலம் நிராகரிக்கப்பட்ட 10 ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு கட்டுக்கதையை தனது விளம்பரத்தின் மூலம் மீண்டும் முன்னிறுத்துகிறது பாஜக. இந்த விளம்பரம் நீக்கப்படுவதோடு, அதை வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதேபோல், ‘நான் மோடியின் குடும்பம்’ என்ற பெயரிலான விளம்பரம், பிரதமர் மோடியின் பிரசாரத்துக்கு அரசின் வளங்கள் எவ்வாறு தவறாக பயன்படுத்தப்படுகிறது? என்பதற்கு எடுத்துக் காட்டாக உள்ளது. இந்த விளம்பரமும் நீக்கப்பட வேண்டும்.

தில்லி மெட்ரோவில் ‘மோடியின் உத்தரவாதம்’ என்ற வாசகத்துடன் பாஜக விளம்பரங்கள் இடம்பெற்றுள்ளன. இவை நீக்கப்பட வேண்டும். அரசு அலுவலகங்கள், பெட்ரோல் நிலையங்களில் உள்ள பிரதமரின் புகைப்படங்கள், தேர்தல் விதிகளின்படி அகற்றப்பட வேண்டும்.

பாஜகவின் அதிகாரபூர்வ சமூக ஊடக கணக்கில் இருந்து காங்கிரஸ் மூத்த தலைவர் ஒருவரை குறிவைத்து மோசமான, தரம் தாழ்ந்த பதிவுகள் பரப்பப்படுகின்றன. இது தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று புகார்களில் கோரப்பட்டுள்ளது.

திரிணமூல் காங்கிரஸுக்கு லாட்டரி அதிபர் மார்ட்டினின் நிறுவனம் ரூ.540 கோடி நன்கொடை

புது தில்லி, மார்ச் 21: தேர்தல் நன்கொடை பத்திரங்கள் மூலம் திரிணமூல் காங்கிரஸுக்கு ரூ.540 கோடியும் பாஜகவுக்கு ரூ.100 கோடியும் லாட்டரி தொழிலதிபர் சான்டியாகோ மார்ட்டினின் ‘ஃப்யூச்சர் கேமிங் அண்ட் ஹோட்டல் சர்வீஸஸ் நிறுவனம்’ நன்கொடையாக வழங்கியுள்ளது தேர்தல் ஆணையம் வியாழக்கிழமை வெளியிட்ட புதிய தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

மொத்தம் ரூ.1,368 கோடி மதிப்பிலான தேர்தல் நன்கொடை பத்திரங்களை வாங்கியதன் மூலம் முதலிடத்தில் உள்ள இந்நிறுவனம் திரிணமூல் காங்கிரஸுக்கு அதிக நன்கொடை வழங்கியிருக்கிறது.

அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவதற்காக தொடங்கப்பட்ட தேர்தல் நன்கொடை பத்திரத் திட்டம் இந்திய அரசமைப்புக்கு எதிரானது என கடந்த மாதம் உத்தரவிட்ட உச்சநீதிமன்றம் அத்திட்டத்தை ரத்து செய்தது. மேலும், இத்திட்டத்தின் மூலம் அரசியல் கட்சிகள் பெற்ற நிதியை பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ) இந்திய தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அதை தேர்தல் ஆணையம் அதன் வலைதளத்தில் வெளியிட வேண்டும் எனவும் உத்தரவிட்டது.

இதையடுத்து அரசியல் கட்சிகள் பெற்ற நன்கொடையை தேர்தல் ஆணையம் அதன் வலைதளத்தில் இம்மாத தொடக்கத்தில் வெளியிட்டது.

இந்நிலையில் முறைகேடுகளில் சிக்கிய லாட்டரி தொழிலதிபர் மார்ட்டினின் ஃப்யூச்சர் கேமிங் நிறுவனம் மேற்கு வங்கத்தின் ஆளும் கட்சியான திரிணமூல் காங்கிரஸுக்கு ரூ.540 கோடி வழங்கியுள்ளது. அதேபோல் பாஜகவுக்கு ரூ.100 கோடியும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸுக்கு ரூ.150 கோடியும் வழங்கியிருப்பது தேர்தல் ஆணையம் வெளியிட்ட புதிய தரவுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்நிறுவனம் திமுகவுக்கு ரூ.509 கோடி நன்கொடை வழங்கியது, தேர்தல் ஆணையம் ஏற்கெனவே வெளியிட்ட தரவுகள் வாயிலாக தெரியவந்தது.

பாஜகவுக்கு ‘க்விக் சப்ளை’ நிறுவனம் ரூ.385 கோடி நன்கொடைஃ ரிலையன்ஸ் நிறுவனத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் க்விக் சப்ளை என்ற நிறுவனம் பாஜகவுக்கு ரூ.385 கோடியும் சிவசேனைக்கு ரூ.25 கோடியும் தேர்தல் நன்கொடை பத்திரங்கள் மூலம் வழங்கியுள்ளது. தேர்தல் நன்கொடை பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகளுக்கு அதிக நிதி வழங்கிய பட்டியலில் இந்நிறுவனம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

தேர்தல் பத்திரங்கள் விவரங்கள் முழுவதும் சமர்ப்பிப்பு: எஸ்பிஐ

புது தில்லி, மார்ச் 21: ‘தேர்தல் நன்கொடை பத்திரங்கள் தொடர்பான அனைத்து விவரங்களும் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது’ என்று உச்சநீதிமன்றத்தில் பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ) வியாழக்கிழமை பதிலளித்தது.

உச்சநீதிமன்றம் கெடு விதித்த நிலையில், விடுபட்ட தகவல்களை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்ததோடு, அதுதொடர்பான பதில் மனுவையும் உச்சநீதிமன்றத்தில் எஸ்பிஐ தாக்கல் செய்தது.

எஸ்பிஐ தலைவர் தினேஷ் குமார் கரா உச்சநீதிமன்றத்தில் வியாழக்கிழமை பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தார். அதில் அவர் கூறியுள்ளதாவது:

இணைய பாதுகாப்பு காரணங்களுக்காக தேர்தல் நன்கொடை பத்திரங்கள் மூலம் நன்கொடை பெற்ற அரசியல் கட்சிகளின் வங்கிக் கணக்கு எண்கள் மற்றும் அந்த வங்கிக் கணக்கு வாடிக்கையாளரின் பிற விவரங்கள் (கேஒய்சி) வெளியிடப்படவில்லை.

அதுபோல, தேர்தல் நன்கொடை பத்திரங்களை வாங்கிய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் வங்கிக் கணக்கு விவரங்களும் பாதுகாப்பு காரணங்களுக்காக வெளியிடப்படவில்லை. நன்கொடை அளிக்கும் அரசியல் கட்சிகளுக்கு தங்களை அடையாளம் காட்டிக்கொள்ளத் தேவையில்லை என்பதால், இந்த விவரங்கள் நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்படவும் இல்லை.

மாறாக, தேர்தல் பத்திரங்கள் வாங்கிய நபர்களின் பெயர், தொகை, நன்கொடை பத்திரத்தின் பிரத்யேக எண், அந்தப் பத்திரங்களை பணமாக மாற்றிய அரசியல் கட்சியின் பெயர், அந்த அரசியல் கட்சியின் வங்கிக் கணக்கு எண்ணின் கடைசி 4 இலக்கங்கள், பணமாக மாற்றப்பட்ட பத்திரத்தின் தொகை மற்றும் பிரத்யேக எண் உள்ளிட்ட முழுமையான விவரங்கள் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், கணக்கு எண், கேஒய்சி விவரங்கள் தவிர, உச்சநீதிமன்றம் கடந்த பிப்ரவரி 15-ஆம் தேத அளித்த தீர்ப்பின் அடிப்படையில் தேர்தல் பத்திரங்கள் தொடர்பான அனைத்து விவரங்களும் முழுமையாகச் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டன என்று எஸ்பிஐ தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைய வலைதளத்தில் விவரங்கள் வெளியீடுஃ தேர்தல் பத்திரங்கள் தொடர்பாக எஸ்பிஐ சமர்ப்பித்த கூடுதல் தகவல்களை உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, தனது வலைதளத்தில் தேர்தல் ஆணையம் வியாழக்கிழமை பொதுமக்கள் பார்வைக்கு வெளியிட்டது.

பத்திரங்களை வாங்கியவர்கள் மற்றும் அதைப் பணமாக மாற்றிய கட்சிகள் என இரு பட்டியல்களாக வெளியிடப்பட்டுள்ள இந்தத் தரவுகளில், பத்திரத்தின் பிரத்யேக வரிசை எண் விவரங்களும் இடம்பெற்றுள்ளன. இதன் மூலம், பத்திரத்தை வாங்கியவர்கள் மற்றும் அந்தப் பத்திரத்தை பணமாக மாற்றிய அரசியல் கட்சிகளை ஒப்பீடு செய்து, எவ்வளவு நன்கொடை பெற்றுள்ளன என்பதை அறிய முடியும்.

தேர்தல் ஆணையர்கள் நியமனத்துக்கு தடையில்லை: உச்சநீதிமன்றம் உத்தரவு

புது தில்லி, மார்ச் 21: புதிய சட்டத்தின் கீழ் தேர்தல் ஆணையர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதற்கு இடைக்காலத் தடை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்சநீதிமன்றம் வியாழக்கிழமை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மத்திய அரசு கடந்த 2023-ஆம் ஆண்டு இயற்றிய தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள் நியமனத்துக்கான புதிய சட்டத்தின் கீழ், பிரதமர் தலைமையிலான குழு தேர்வு செய்த சுக்பீர் சிங் சாந்து, ஞானேஷ் குமார் ஆகியோர் புதிய தேர்தல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டனர்.

‘தேர்தல் ஆணையர்கள் தேர்வுக் குழுவில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஓர் உறுப்பினராக இடம்பெற வேண்டும்’ என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு கடந்த 2023-இல் குறிப்பிட்ட நிலையில், இந்தப் புதிய சட்டத்தை மத்திய அரசு இயற்றியது. அதன்படி, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்குப் பதிலாக மத்திய அமைச்சர் இக்குழுவில் இடம் பெற்றார்.

இந்தப் புதிய சட்டம் மற்றும் அந்தச் சட்டத்தின் கீழ் தேர்தல் ஆணையர்கள் நியமனம் செய்யப்பட்டதற்கு இடைக்காலத் தடை கோரி உச்சநீதிமன்றத்தில் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சய் கன்னா, தீபாங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, ‘மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ள சூழலில், தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டத்துக்கு இடைக்காலத் தடை விதிக்கவோ அல்லது அதன் நடைமுறைகளை நிறுத்தவோ முடியாது. அவ்வாறு இடைக்காலத் தடை விதிப்பது நிச்சயமற்ற சூழலையும், குழப்பத்தையும் ஏற்படுத்திவிடும். மேலும், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் ஆணையர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் எதுவும் வைக்கப்படவில்லை.

அதோடு, முன்னர் தேர்தல் ஆணையர்கள் அரசு அதிகாரிகள் மூலம் நியமிக்கப்பட்டனர். தற்போது ஒரு சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பாக உச்சநீதிமன்றம் கடந்த 2023-இல் அளித்த தீர்ப்பில், தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படும் வரை, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி உறுப்பினராக இடம்பெறும் வகையிலான தேர்வுக் குழு மூலம் தேர்தல் ஆணையர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றுதான் அறிவுறுத்தப்பட்டது.

மாறாக, எந்த வகையில் இதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கவில்லை’ என்று குறிப்பிட்ட நீதிபதிகள், புதிய சட்டம் மற்றும் தேர்தல் ஆணையர்கள் நியமனம் மீது இடைக்காலத் தடை கோரிய மனுக்களைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

மேலும், ‘தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டத்தின் செல்லத்தக்க நிலையை எதிர்த்து தொடரப்பட்ட பிரதான மனு மீது உச்சநீதிமன்றம் விசாரணை மேற்கொள்ளும்’ என்று குறிப்பிட்ட நீதிபதிகள், இதுதொடர்பாக மத்திய அரசு 6 வாரங்களுக்குள் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை ஆகஸ்ட் 5-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

ஜாதிவாரி கணக்கெடுப்பு வேலைவாய்ப்பின்மைக்குத் தீர்வாகாது

புது தில்லி, மார்ச் 21: வேலைவாய்ப்பின்மைக்கும், சமூகத்தில் காணப்படும் சமத்துவமின்மைக்கும் ஜாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஒருதீர்வாக இருக்காது என்று காங்கிரஸ் மூத்த தலைவரான ஆனந்த் சர்மா, அக்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஆனந்த் சர்மா

இதன் மூலம் காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ நிலைப்பாட்டில் இருந்து ஆனந்த் சர்மா முரண்பட்டுள்ளார். மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றால் நாடு முழுவதும் ஜாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று காங்கிரஸ் கட்சி வாக்குறுதி அளித்துள்ளது.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு மூத்த தலைவர் ஆனந்த் சர்மா எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

காங்கிரஸ் கட்சி எப்போதும் அடையாள அரசியலில் ஈடுபட்டதில்லை. இந்தச் சூழலில் தனது வரலாற்று நிலைப்பாட்டில் இருந்து காங்கிரஸ் விலகி வந்திருப்பது பலரையும் கவலைகொள்ளச் செய்துள்ளது.

கடைசியாக ஜாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு என்பது பிரிட்டிஷாரின் காலனி ஆட்சியில் கடந்த 1931இல் நடைபெற்றது.

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் ஜாதி தொடர்பான கேள்விகளைக் கேட்பதில்லை என்று மத்திய அரசு கொள்கை முடிவை எடுத்தது. விதிவிலக்காக எஸ்.சி., எஸ்.டி. பிரிவினர் தொடர்பான தகவல் மட்டும் மாநிலங்களால் சேகரிக்கப்படுகிறது.

சுதந்திரத்துக்குப் பிறகு அனைத்து மக்கள்தொகை ஆணையர்களும் தேசிய அளவில் ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளனர்.

எனது பார்வையில், வேலைவாய்ப்பின்மைக்கும் சமூகத்தில் காணப்படும் சமத்துவமின்மைக்கும் ஜாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஒருதீர்வாக இருக்காது. இந்த விவகாரத்தில் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டில் இருந்து விலகி வருவது நீண்ட கால அளவிலும், தேசிய அளவிலும் பின்விளைவுகளைக் கொண்டிருக்கும்.

அனைவரையும் அரவணைத்துச் செல்லும் கொள்கையைக் கொண்டுள்ள கட்சி என்ற முறையில் காங்கிரஸ், தேசிய கருத்தொற்றுமையை உருவாக்கும் தனது பங்களிப்பை மீண்டும் செயல்படுத்த வேண்டும். நல்லிணக்கமான சமூகத்தை உருவாக்க கட்சி பாடுபட வேண்டும். பிராந்திய மற்றும் ஜாதி ரீதியிலான அமைப்புகளின் நிலைப்பாட்டில் இருந்து காங்கிரஸ் விலகி இருக்க வேண்டும்.

வெளிப்படைத்தன்மை, ஜனநாயகரீதியிலான விவாதம், கருத்து சுதந்திரம் ஆகியவற்றில் காங்கிரஸ் தீவிர நம்பிக்கை கொண்டுள்ளது என்று ஆனந்த் சர்மா தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.

பெருநிறுவன அலுவலகம் / தலைமை அலுவலகம் - GICHFL, நேஷனல் இன்சூரன்ஸ் பில்டிங், 6 வது தளம், J T சாலை, அஸ்டோரியா ஹோட்டல் அடுத்து, சர்ச்கேட், மும்பை – 400 020 தொலைபேசி - (022) 43041900 மின்னஞ்சல் முகவரி - corporate@gichf.com வலைதளம் - www.gichfindia.com
சென்னை கிளை முகவரி - GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., எண் 480, கிவ்ராஜ் வளாகம், பிளாக்-2, 2ஆவது தளம், நந்தனம், அண்ணா சாலை, சென்னை-600035. கிளை மின்னஞ்சல் முகவரி: chennai@gichfindia.com, தொ.பே.: 9894601538.

E-ஏல விற்பனை அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ளவர் **GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., (GICHFL) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலராக** இருக்கிறபடியால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுக் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்பினைப் பின்வரும் கடன்தாரர்களுக்கு / அடமானதாரர்களுக்கு அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். எனினும் கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் குறிப்பிட்ட நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே கையொப்பிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14 அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8-இன் கீழான உரிமைகளைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொத்துக்களை **இயற்கவாதீனம்** செய்துள்ளார்.

வ. எண்	கடன் கோப்பு எண் / கடன்தாரர், கூட்டுக் கடன்தாரர், ஜாமீன்தாரர் பெயர்	அடகு வைக்கப்பட்டுள்ள சொத்தின் (கட்டுமானப்பரப்பு சேர்த்து) முகவரி	கோரிக்கை அறிவிப்பு வெளியிட்டு நாள்	நேரடி கவாதீன நாள்	21.03.2024 நாள்படி மொத்த நிலுவைத்தொகை (அசல், வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட) (ரூபாயில்)	குறைந்தபட்ச விலை (ரூபாயில்)
1.	TN0050110002642 R செல்வராஜ் (கடன்தாரர்) மகேஸ்வரி S (கூட்டுக் கடன்தாரர்)	சடையப்பன் என்கிளேவ், அடுக்கக எண்-F-1, முதல்தளம், மனை கோவில் இரண்டாவது தெரு, சித்தலபாக்கம், சென்னை – 600126. மேல்கட்டுமானப்பரப்பு - 1050 சதுர அடி, பிரிபடாப்பங்கு - 500 சதுர அடி.	21.03.2022	19.02.2024	ரூ. 41,81,815/-	ரூ. 31,00,000/-
2.	TN0051300106999 S M செல்லக்கண்ணன் (கடன்தாரர்) ஜம்பா S (கூட்டுக் கடன்தாரர்)	அபிநயாஸ் அபார்ட்மெண்ட்ஸ், அடுக்கக எண் C, தரைத்தளம், மனை எண் 122, ராஜாத்தினம் நகர் பிரதான சாலை, ஸ்ரீநிவாசபுரம், ஜயப்பன்தாங்கல், சென்னை – 600056, மேல்கட்டுமானப்பரப்பு - 660 சதுர அடி, பிரிபடாப்பங்கு - 306 சதுர அடி.	20.04.2012	23.06.2016	ரூ. 34,57,891/-	ரூ. 14,85,000/-

E-ஏல நாள் மற்றும் நேரம்: **26.04.2024** அன்று (**https://www.bankauctions.in**) இணைய முகப்பில் **பிற்பகல் 02:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி** வரை, தலா 5 நிமிடம் எண்ணிக்கை வரம்பற்ற காலநீட்டிப்புடன்.
விலைப்புள்ளியை / மூடி முத்திரையிடப்பட்ட ஏலப்புள்ளியை உரிய விலைப்புள்ளிப் படிவத்தில் டேவணித்தொகை (EMD) மற்றும் வாடிக்கையாளர் விவரங்களுடன் (KYC) இணைய வழியிலோ மேற்குறிப்பிட்ட GICHF அலுவலகத்திலோ தாக்கல் செய்யக் கடைசி நாள்: **24.04.2024** அன்று அல்லது அதற்குமுன்.
மேலும் மேற்கண்ட சொத்துக்களின் / உடைமைகளின் (SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் விதிகளின்படியான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான) E-ஏல விற்பனைக்கான இந்தப் பொது அறிவிப்பின் மூலம் குறிப்பிட்ட சொத்துக்களை "உள்ளது உள்ள இடத்தில்" மற்றும் "உள்ளது உள்ளபடி" எனும் முறையில் வாங்குவதற்கான விலைகோரல்கள் மூடி முத்திரையிட்ட உறைகளில் அல்லது இணைய வழியில் GICHFL நிறுவனத்தால் வரவேற்கப்படுகின்றன.

ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:
1. E-ஏலமானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "மாற்று எதுவும் வழங்கப்பட மாட்டாது" எனும் அடிப்படைகளில் இணையவழியில் நடைபெறும். இந்த E-ஏலம் GICHF நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட E-ஏலச் சேவை வழங்குநரான "M/s. 4 Closure" நிறுவனத்தால் நடத்தப்படும்.
2. **ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்கள் பெயரை https://bankauctions.in எனும் இணைய முகப்பில் பதிவு செய்து கொண்டு தங்களுக்கான பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். கலந்து கொள்ள இருக்கும் ஏலதாரர்கள் E-ஏலத்துக்கான இணைய வழிப் பயிற்சியைப் பின்வரும் சேவை வழங்குநரிடம் பெறலாம்: M/s. 4 Closure, அமீரபேட்டை, ஐதராபாத், தொலைபேசி எண்.: 040-23736405 மற்றும் +91-8142000062 / 66, Prakash@bankauctions.in. தொடர்பு எண்கள்: 8383075060 / 8744090081.**
3. E-ஏல விற்பனையானது SARFAESI சட்டம் / விதிகள் 2002-இன் கீழான விதிமுறைகளுக்கும் கீழே / இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் ஆர்வமுள்ள / கலந்து கொள்ளும் ஏலதாரர்களால் தாக்கல் செய்யப்பட உள்ள விலைகோரல் / ஏலப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டது.
4. இணைய வழி E-ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர் ஒவ்வொருவருக்கும் சொந்த மின்னஞ்சல் முகவரி இருக்க வேண்டியது கட்டாயமானது.
5. ஆர்வமுள்ள ஏலதாரர் ஒருவர் GICHF நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் முன்னிலையில் தகுதியுள்ள விலைப்புள்ளிதாரராக முறையாகப் பதிவு செய்யப்பட்டவுடன் அவர் ஆவணத்தைத் தாக்கல் செய்து இணைய முகப்பின் வழியே E-ஏலத்தில் கலந்து கொள்வதற்கான தனது ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டும். E-ஏலச் சேவை வழங்குநரிடமிருந்து தனக்கான பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பெற வேண்டியது விலைப்புள்ளிதாரரின் / இணைய வழி ஏலதாரரின் தனிப்பட்ட பொறுப்புக்குரியது.
6. மேற்கண்ட சொத்துக்கள் மேற்குறிப்பிட்ட குறைந்தபட்ச விலைக்குக் கீழே விற்பனை செய்யப்பட மாட்டா.
7. **ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச விலையில் 10% அளவுள்ள டேவணித்தொகையைக் (EMD) கேட்பு வரைவோலை / RTGS / NEFT மூலம் GIC HOUSING FINANCE LTD எனும் பெயருக்குச் செலுத்த வேண்டிய வங்கி விவரங்கள் பின்வருமாறு: வங்கியின் பெயர்: யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா, கணக்கு எண்: 005111010000039, கணக்கின் பெயர்: GIC HOUSING FINANCE LTD E AUCTION COLLECTION, கிளையின் பெயர்: கோட்டை, முகவரி: யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா, கோட்டை, மும்பை-400001, IFSC எண்: UBIN0800511.**
8. வெற்றி பெறும் ஏலதாரர்களைப் பொறுத்த வரையில் அவர்களது மேற்கூறிய வைப்புத்தொகைகள் பின்னர் கழித்துக் கொள்ளப்படும். மற்றவர்களுக்கு அவை திருப்பி அளிக்கப்படும். டேவணித்தொகைக்கு (EMD) வட்டி ஏதும் கிடையாது.
9. மேற்கூறிய டேவணித்தொகையுடன் (EMD) கூடிய விலைகோரல்களை இணைய வழியில் தாக்கல் செய்ய வேண்டிய இணைய முகப்பு: https://bankauctions.in/. இத்துடன் டேவணித்தொகையும் நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை மற்றும் முகவரிச் சான்று முதலான வாடிக்கையாளர் விவர ஆவணங்களின் (KYC) நகல்களும் இணைக்கப்பட்டுச் சேவை வழங்குநரிடம் தாக்கல் செய்யப்பட வேண்டும். அல்லது ஏலப் படிவம், டேவணித்தொகை மற்றும் வாடிக்கையாளர் விவர ஆவணங்கள் ஆகியவற்றை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட உரிய கிளை அலுவலகங்களுக்கு வந்து சேருமாறு தாக்கல் செய்ய வேண்டும்.
10. விலைப்புள்ளிகள் திறக்கப்பட்ட பின் குறைந்தபட்ச விலைக்குக் குறையாமல் ஏலம் கோரியுள்ள ஆர்வமுள்ள ஏலதாரர்களுக்கு அதிகாரப்பூர்வ அலுவலரின் தனிப்பட்ட விருப்புரிமையின் பேரில் ஏலத்தொகையை உயர்த்திக் கோர வாய்ப்பு வழங்கப்படும்.
11. வெற்றி பெறும் ஏலதாரர்கள் ஏற்கெனவே செலுத்திய டேவணித்தொகை (EMD) போக, விற்பனை விலையில் 25% தொகையை விற்பனைக்கான அதிகாரப்பூர்வ அலுவலரால் விலைகோரல் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடனே செலுத்த வேண்டும். தவறினால் டேவணித்தொகை பறிமுதல் செய்யப்படும். விற்பனை விலையில் மீதமுள்ள 75% தொகையை அதிகாரப்பூர்வ அலுவலரின் விருப்புரிமையின் பேரில், விற்பனை உறுதி செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் செலுத்தலாம். இந்தக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மீதத் தொகையைச் செலுத்தத் தவறினால், ஏற்கெனவே செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும். பறிமுதல் தொடர்பாக வெற்றி பெற்ற ஏலத